DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.697/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜசேகரன் | த-பெ | மைக்கேல் சாமி |
| ஊர்: | : | கோவனி | | |
| வயது: | : | 68/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை ஓய்வு | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.08.2026**

**1ம் எதிரி ஆஜர். பிற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. பார்த்தசாரதி ஆஜர் ஆகி உள்ளார்.**

---------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவனி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் அமலராணி. எங்களுக்கு டென்சிங் என்கிற மகனும் டென்சிலா என்கிற மகளும் உள்ளனர். நான் பஞ்சு மில்லில் வேலை செய்துவிட்டு தற்போது ஓய்வில் உள்ளேன். ஆஜர் எதிரி எனது மருமகன். 2 ம் எதிரி 1 ம் எதிரியின் தாயார். 3 ம் எதிரி 1 ம் எதிரியின் தங்கை. 4 ம் எதிரி 1 ம் எதிரியின் தம்பி. எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் கடந்த 29.05.2015 அன்று கிறித்துவ முறைப்படி காரைக்குடியில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது மகளுக்கு 60 பவுன் நகையும், 1 ம் எதிரிக்கு 11 பவுன் நகையும் அணிவித்தேன். மேலும் திருமணத்தன்று ரூ.4,50,000 பணம் ரொக்கமாக கொடுத்தோம். திருமணத்தன்று இரவு 2 ம் எதிரி மேற்படி நகை மற்றும் பணத்தினை அவரது வசம் எடுத்து கொண்டார். திருமணம் முடிந்த பிறகு 10 நாட்கள் 1 ம் எதிரியும் எனது மகளும் 1 ம் எதிரியின் வீட்டில் வசித்து வந்தார்கள். திருமணம் முடிந்து 10 நாட்கள் கழித்து அவர்கள் வீட்டின் அருகில் ஒரு வீடு 18,00,000 ரூ க்கு விற்பனைக்கு வருவதாகவும் அதை நாங்கள் வாங்கி தர வேண்டும் என்றும் சொல்லி எனது மகளை அடித்து கொடுமை படுத்தியுள்ளார்.

எனது மகள் தற்போது திருமணத்திற்கு செலவாகி உள்ளதாலும் இப்போதைக்கு வீடு வாங்கி தர முடியாது என்று சொன்னதற்கு எதிரிகள் அனைவரும் எனது மகளை துன்புறுத்தியுள்ளார்கள்.

மேலும் எதிரிகள் என் மகளை பார்த்து உனக்கு இரண்டாவது திருமணம் என்றும் தெரிந்தும் திருமணம் செய்தது 100 பவுன் நகை மற்றும் வீடு பெறுவதற்குதான் என்றும் கொடுமைபடுத்தியுள்ளார்கள். மேற்படி வீடு மற்றும் 10,00,000 ரூ பணம் மற்றும் 100 பவுன் நகை தந்தால் மட்டுமே தான் நீ இந்த வீட்டில் வாழ முடியும் என்று எதிரிகள் எனது மகளிடம் சொல்லியுள்ளார்கள். எனது மகள் மேற்படி சங்கதிகளை என்னை செல்போன் மூலமாக தொடர்பு கொண்டு சொன்னார். பின்பு மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்து மேற்படி வீடு, நகை மற்றும் பணம் ஆகியவற்றை கொடுத்தால் தான் வீட்டிற்கு வரவேண்டும் என்று எனது மகளை வீட்டை விட்டு விரட்டிவிட்டார்கள். பின்பு காரைக்குடியில் உள்ள பெரியோர்களை அழைத்து பேசி சமாதானம் செய்து மீண்டும் எனது மகளை எதிரியின் வீட்டிற்கு வாழ அனுப்பி வைத்தேன். பின்பு மூன்று மாதம் 1ம் எதிரியுடன் குடும்பம் நடத்திவந்தார். பின்பு 1ம் எதிரி வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டார். பிற எதிரிகள் எனது மகளை மீண்டும் மேற்படி வீடு, நகை மற்றும் பணம் ஆகியவற்றை பெற்று வருமாறு தொந்தரபு செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பிற எதிரிகள் எனது மகளை எங்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

பின்பு 4-5 மாதங்கள் கழித்து 1ம் எதிரி வெளிநாட்டில் இருந்து அவரது வீட்டிற்கு வந்தது தெரிய வந்த உடன் எனது மகளும் மனைவியும் எதிரி வீட்டிற்கு சென்று கேட்டபோது நாங்கள் சொல்லியதை நிறைவேற்றும் வரை எனது மகளை அவர்களது வீட்டில் வாழ அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மேலும் அவர்களுக்கு மிரட்டல் விடுத்து அனுப்பிவிட்டார்கள். பின்பு எனது மகள் இது தொடர்பாக காவல் துறையில் புகார் அளித்தார். புகாரின் பேரில் விசாரணை செய்த போலீசார் எனது மகளையும் 1ம் எதிரியையும் தனிக்குடித்தனம் நடத்துமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்கள். அதன் பேரில் 1ம் எதிரியும் எனது மகளும் தனிக்குடித்தனம் 4 மாதங்கள் இருந்தார்கள். எனது மகள் திருமணத்திற்கு செல்லவேண்டும் என்று 2ம் எதிரியிடம் இருக்கும் நகைகளை பெற்று தருமாறு 1ம் எதிரியிடம் சொன்னபோது 2ம் எதிரி எனது மகளிடம் எவ்வாறு நகைகளை கேட்பாய் என்று சண்டையிட்டார். பின்பு எனது உறவினர்களிடம் இருந்து 30 பவுன் நகை பெற்று எனது மகளுக்கு அணிவித்து திருமணத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் திருமணம் முடிந்த பின்பு எனது மகள் நகைகளை கழட்டி வைத்து குளிக்க சென்றபோது 1ம் எதிரி நகைகளை எடுத்து கொண்டும் எனது மகளையும் கீழே தள்ளிவிட்டும் சென்றுவிட்டார். மேற்படி சங்கதிகளை போனில் தொடர்பு கொண்டு சொல்லி அழுதார். பின்பு நான் எனது மகனை அழைத்து எனது மகள் வீட்டிற்கு சென்று நடந்த விபரங்களை கேட்குமாறு சொன்னேன். எனது மகன் கேட்க சென்றபோது அவரையும் அடித்து காயப்படுத்தினார்கள். பின்பு எனது மகள் காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். புகாரில் நகைகளை மீட்டு தருமாறு எதிரிகளை

விசாரணை செய்யுமாறும் புகார் அளித்தோம்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.03 17:11:39 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.